தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 10 இதழ் : 12 அக்டோபர் 2014

## செய்திமலர்

கர்த்தர்
இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச்
சொல்லியிருந்த
நல்வார்த்தைகளிலெல்லாம்
ஒரு வார்த்தையும்
தவறிப்போகவில்லை;
எல்லாம் நிறைவேறிற்று.

யோசுவா 21 : 45

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். ரமேஷ் புரியா

காக்கரதாரா, மத்தியப்பிரதேசம்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் ரமேஷ் புரியா. நான் மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் அமைந்துள்ள காக்கரதாரா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசுவை அறியாததற்கு முன்பு பாவ பழக்கத்திலும், விக்கிரக ஆராதனையிலும் ஈடுபட்டு, அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தேன். நான் ஐந்து ஆண்டுகளாக பிசாசின் பிடியில் சிக்கி மிகவும் அலைக்கழிக்கப்பட்டு வந்தேன். அதினிமித்தம் எங்களது குடும்பத்தில் சமாதானமில்லாமல் வாழ்ந்து வந்தோம். எனது விடுதலைக்காக மந்திர கிரியைகளுக்காகவும், மருத்துவத்திற்காகவும் அதிகளவில் செலவு செய்தும் எந்த பலனுமில்லை.

இந்த சூழ்நிலையில் போதகர். ரமேஷ் வசுனியா அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து இயேசுவைப் பற்றி சுவிசேஷம் அறிவித்து, எனது விடுதலைக்காகவும், எனது குடும்பத்தின் சமாதானத்திற்காகவும் ஜெபித்தார். அவர் ஜெபித்தவுடனே எனக்கு பிசாசின் பிடியிலிருந்து தேவன் பூரண விடுதலை கொடுத்தார். அந்த நாளிலிருந்து எங்கள் குடும்பத்தில் தெய்வீக சமாதானத்தை தேவன் தந்தார். இந்த அற்புதத்தின் மூலம் நாங்கள் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, கேடி கிராமத்தில் அமைந்துள்ள ஷாலோம் சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தோம். தொடர்ந்து 2002–ம் ஆண்டு போதகர். வில்சன் சங்காடா மூலம் ஞானஸ்நானம் பெற்றேன்.

அதன்பின் ஒரு நாள் தேவன் தரிசனத்தின் மூலம் என்னை ஊழியம் செய்ய அழைத்தார். அந்த அழைப்பினை அப்படியே ஏற்று. ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன். பின்பு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஒரு மாத குறுகிய கால வேதாகமப் பயிற்சி பெற்று, எனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். ஐந்து குடும்பங்களுடன் சபையை ஆரம்பித்தேன். தற்போது தேவனுடைய கிருபையால் 145 குடும்பங்கள் சபையில் தேவனை ஆராதித்து வருகிறார்கள், B.Th., படிப்பை முடித்து, 2009–ம் ஆண்டு போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டு, தொடர்ந்து குடும்பமாக தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறோம். இரண்டு கிளை சபைகளை எழுப்ப தேவன் கிருபை செய்தார். எனது தரிசனம் 2015–க்குள் இன்னும் புதிதாக 2 சபை மற்றும் 2 ஊழியர்களை எழுப்ப வேண்டும் என்பதே. தேவனுக்கே மகிமை!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mr. Edwin J. Rajkumar,** (Kuwait), Sivakasi.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!



## உங்கள் சகோதரனிடமிருந்து

*கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். தேவகிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் தியாகமான ஆதரவுகளினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் வளர்ந்து வருகிறது. இரட்சிக்கப்படுகிறவர்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். புதிய ஊழியர்களும் எழும்பி புதிய சபைகளும் உருவாக்கப்பட்டு வருகிறது.

வளர்ந்து வரும் நம் தரிசன பணிகளை கொடுத்து தாங்க இன்னும் பலநூறு ஆதரவாளர்கள் எழும்ப வேண்டிய சூழ்நிலையில் தேவகிருபையால், 23.08.2014 அன்று நாகர்கோவிலிலும் 24.08.2014 அன்று சென்னையிலும் ஷாலோம் மிஷனரி தரிசன கூடுகை நடத்த தேவன் கிருபை தந்தார். நம் அன்பு **சகோதரர் மோகன் சி. லாசரஸ்** அவர்கள் இரு கூடுகைகளிலும் சிறப்பு செய்தி கொடுத்து அழைப்பு கொடுத்த போது பலநூறு பேர்கள் பீல்மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபிக்கவும், தாங்கவும் முன் வந்தார்கள்.

செப்டம்பர் மாதத்தில் 3 மாநிலங்களில் ஊழியர் கூடுகையுடன் 600 சபைகளின் மூப்பர்களையும் சந்திக்க தேவன் கிருபை தந்தார். 12 மையங்களில் நடத்தப்பட்ட இந்த கூடுகைகளில் ஆவியானவர் வல்லமையாக ஊற்றப்பட்டார். பீல் மக்கள் தரிசனங்கள் நிறைவேற்றப்பட அனைவரும் அர்ப்பணித்தார்கள். 25 கிராமங்களில் ஆலயகட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. மூன்று மாநிலங்களில் நடைபெறும் Compassion Project மூலமாக சுமார் 1000 ஆதிவாசி மாணவர்கள் கிறிஸ்துவில் பெலப்பட்டார்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் குஜராத்தில் 05.10.2014, மத்திய பிரதேசத்தில் 12.10.2014, மற்றும் இராஜஸ்தானில் 19.10.2014 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெற உள்ள **ஷாலோம் மிஷன் ஞாயிறு** ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் அனைத்து விசுவாசிகளும் பீல் மக்களுக்காக ஜெபிக்கவும், ஆத்தும ஆதாயம் செய்யவும்; தேவனுக்காக ஷாலோம் ஊழியங்களுக்கு காணிக்கை உற்சாகமாக கொடுக்கவும் ஜெபியுங்கள்.

மேலும், அக்டோபர் 27 முதல் 30 வரை நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்காக ஜெபியுங்கள். கர்த்தர் தாமே இக்கூடுகை மூலம் ஊழியர்களை இன்னும் பரிசுத்தப்படுத்தி, அக்கினி ஜுவாலையாக பயன்படுத்துவாராக. முகாமிற்கு தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்.

**“என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை”** (யோவேல் 2 : 26) என்ற வசனத்தின்படி தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : **09377445468** (குஜராத்)

# வாக்கு மாறாத தேவன்



சிறப்புச் செய்தி : பேராயர். **V. தேவதாஸ்**

**"கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று". –** யோசுவா 21 : 45

சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவன் ஆபிரகாமின் மூலமாக அவன் சந்ததிக்கு (இஸ்ரவேல் குடும்பத்தாருக்கு) வாக்கு பண்ணின பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை அவர் சொன்னபடியாக நிறைவேற்றி கொடுத்தார். 400 வருடங்கள் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்த இஸ்ரவேல் ஜனங்கள், ஆபிரகாமின் நான்காம் தலைமுறையில் தாசனாகிய மோசே மூலமாக அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி யோசுவா மூலமாக கானான் தேசத்தை சுதந்தரிக்கவும், பங்கிட்டு கொடுக்கவும் தேவன் கிருபை செய்தார். அவர் சொன்னபடி நிறைவேற்றுகிற தேவனாக இருக்கிறார்.

ஆணையிட்டதை கொடுக்கிற தேவன் : யோசுவா 21 : 43 வாசித்து பாருங்கள். இந்தப் பிரகாரமாகக் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தையெல்லாம் கொடுத்தார்; அவர்கள் அவைகளைச் சுதந்தரித்துக் கொண்டு, அவைகளிலே குடியிருந்தார்கள். பிதாவாகிய தேவன் ஆபிரகாமிற்கு தரிசனமாகி ஆதி. 12 : 7 ஆதி. 13 : 14–17; ஆதி. 15 : 13–21 கானான் தேசத்தை இஸ்ரவேல் சந்ததிக்கு வாக்குத்தத்த தேசமாக கொடுத்தார். ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு என்று தலைமுறை தலைமுறையாக அதை உறுதிப்படுத்தி அதை நிறைவேற்றினார். ஆனால் அவருடைய வேளை வரும் வரை இஸ்ரவேலர் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. நான்காம் தலைமுறை மட்டும் கிட்டத்தட்ட 400 வருடங்கள் காத்திருந்து, அநேக பாடுகளையும், உபத்திரவங்களையும் கடந்து போனார்கள். தேவன் தம்முடைய தீர்மானத்தின்படி ஆபிரகாமிடம் ''இன்னும் எமோரியரின் அக்கிரமம் நிறைவாகவில்லை'' என்று சில காரியங்களை அவர் மனதில் வைத்து தேவன் தாமே காத்திருக்கிறார். தேவனுடைய ஞானத்தை நாம் அறிந்து கொள்ள முடியாது. தேவனே தம் ஜனங்களுக்கு அதை வெளிப்படுத்துவார்.

ஷாலோம் ஊழியத்தை 1991ஆம் ஆண்டு ஜுலை மாதம் அற்பமாக பேய் பங்களா ஒன்றில் ஆரம்பித்தோம். தேவனுடைய அழைப்பும், தரிசனமும், வாக்குத்தத்தம் அன்றி வேறு எந்த மூலதனமும் கிடையாது. பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை, வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார் (எபி. 1 : 1, 2)என்று வாசிக்கின்ற வார்த்தையின்படி 23 ஆண்டுகளில் படிப்படியாக தேவன் நடத்தி வந்து இன்று ஷாலோம் திருமண்டலமாக உருவாக்கி உள்ளார். எனக்கன்பானவர்களே, தேவன் உங்களுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தால் நிச்சயமாக நிறைவேற்றுவார். ஒரு சொல்லும் கூட கீழே விழுவதில்லை, தவறுவதும் இல்லை. ஆனால்

தேவன் குறித்த காலம் வரை பொறுமையுடன் விசுவாசத்துடன் காத்திருப்போம். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் என்று சொன்ன அருள்நாதர் இயேசுவின் வார்த்தை உங்கள் குடும்பத்தில், பிள்ளைகளின் வாழ்க்கையில், தொழிலில், ஊழியப்பாதையில் கட்டாயம் நிறைவேறும். நாங்களும் தேவன் தந்த தரிசனப்படி, அழைப்பின்படி 1 கோடி பீல் மக்கள் இரட்சிக்கப்பட்டு 7000 கிராமங்களிலும் சபைகள் உருவாகும் என்ற வாக்குத்தத்தை விசுவாசித்து ஊழியப்பாதையில் கடந்து செல்கிறோம்.

இரண்டாவதாக யோசுவா 21 : 44ன் பின் பகுதியை வாசித்து பாருங்கள் தேவன் தந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற கர்த்தரே யுத்தம் செய்தார். எகிப்து தேசத்தில் பார்வோன் ராஜாவுக்கு விரோதமாக கர்த்தர் யுத்தம் பண்ணினார். பின்னாக வந்த பார்வோனின் சேனையை மூழ்கடித்தார். விரோதமாக எழும்பின அமலேக்கியரை விழப்பண்ணினார். எரிகோவின் கோட்டைகளை உடைத்தார். யோசுவாக்கு விரோதமாக எழும்பின ஆயி பட்டணத்து ராஜா மற்றும் 5 இராஜாக்கள் கூடி வந்த யுத்தத்தில் வெற்றி கொடுத்தார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குப் பண்ணின கானான் தேசத்தில் காணப்பட்ட 31 இராஜாக்களையும் தேவன் விரட்டினார்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் மூலமாக செங்கடல், யோர்தானை பிரிக்க வைத்தார். சூரியன், சந்திரனை நிற்கச் செய்தார். வானத்திலிருந்து பெரிய கற்களை விழப் பண்ணினார். எரிகோ கோட்டைகளை தகர்த்து எரிந்தார். வேதம் சொல்கிறது, **“கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்”** யோசுவா 10 : 14 என் அன்பு சகோதரனே, சகோதரியே தேவன் வாக்குத்தத்தம் கொடுப்பவர் மட்டுமல்ல, அதை நிறைவேற்ற தம் ஜனங்களுக்காக யுத்தங்களை அவரே செய்வார். உனக்கு விரோதமாக உருவாக்கப்படும் சகல ஆலோசனைகள், திட்டங்கள், கண்ணிகள், பிசாசின் போராட்டங்கள் ஆகியவற்றிலும் கர்த்தரே உனக்கு யுத்தம் செய்வார். “நீங்கள் அமர்ந்திருந்து நானே கர்த்தர் என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்” என்று கர்த்தர் சொல்கிறார்.

திருமணமாகி 40 நாட்களில் முதன் முறையாக IMS ஸ்தாபனத்தின் மூலமாக இந்த பீல் மக்கள் மத்தியில் புதுமணத் தம்பதிகளாக கடந்து வந்தோம். கர்த்தர் தாமே தரிசனம் தந்து அழைத்து வந்தார். குடிகாரர்கள், கொள்ளையடிப்பவர்கள், மந்திரவாதிகள், பில்லிசூனியங்கள், சமுதாய எதிர்ப்புகள் பலவிதமான மரணகட்டுகள் சூழ்ந்து கொண்ட நேரங்கள், கொடிய நோய்கள் இவைகள் மத்தியில் கடந்த 29 வருடங்கள் கர்த்தர் தாமே எங்களுடன் இருப்பது மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் யுத்தங்களை நடத்தி பிசாசானவன் வெட்கப்படும்படியாகவும்; வெற்றியை சுதந்தரித்துக் கொள்ளவும் தேவன் கிருபை தருகிறார்.

யுத்தமில்லாமல் இளைப்பாற பண்ணினார். நம் தேவன் எவ்வளவு அன்புள்ளவர்? கரிசனம் உள்ளவர். அவர் நம்மை இளைப்பாற பண்ண வைக்கிறார். ஆண்டவராகிய இயேசு சொல்வதை பாருங்கள் **“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” மத். 11 : 28** அவரே நமக்காக யுத்தங்களை செய்து நமக்கு இளைப்பாறுதல் தருகிறவர். மாராவின் கசப்பின் வழியாக கடந்து வந்த போது மதுரமாக்கி ஏலிமுக்குள் பேரீச்சை மரங்கள், நீறுற்றண்டைக்கு வழிநடத்தி

செல்பவர். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் என்று வாக்குப் பண்ணி துக்கத்தை சந்தோஷமாக மாற்றியவர் நம் தேவன். இஸ்ரவேல் ஜனங்கள் 400 வருடங்கள் அடிமைத்தனத்திலும் 40 வருடங்கள் வனாந்திர பாதையில் கடந்து வந்தாலும் பலத்த கரம், ஓங்கிய புயம் அவர்களை நடத்தி வந்தது அல்லவா! பசிக்கு மன்னாவையும், இறைச்சியையும் ருசிக்க அன்பையும் தந்த தேவன் அல்லவா! போட்டிருந்த வஸ்திரங்களையும், செருப்புகளையும் கூட பழசாகாமல் பாதுகாத்து நடத்திய தேவன் அல்லவா!

இன்று இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்த தேசமான கானானில் பிரவேசித்து பாலும், தேனும் ஓடும் ஆசீர்வாதம் பெற்றார்கள். இளைப்பாறுதலை பெற்றார்கள். மகிழ்ச்சியும், களிப்பும் உண்டானது. நியாயப்பிரமாணங்களை தேவன் தந்து நீதியின் பாதையில் நடத்துகிறார். இன்று நமக்கும் தேவன் சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் கட்டளையிடுவார். கர்த்தருக்குள் நம்மை மகிழ்ந்து களிகூரப்பண்ணுவார். கடைசியாக யோசுவா இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள என்ன செய்தான்?

முதலாவது, தேவன் சொன்னபடி ஜனங்களை பரிசுத்தப்படுத்துகிறான். யோசுவா 3 : 5 வாசித்துப் பாருங்கள். **"யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள் : நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்."** தேவன் விரும்பும் பரிசுத்தத்திற்கு நேராக நம்மை ஒப்புக் கொடுக்கும்போது அற்புதங்களைச் செய்வார்.

இரண்டாவது, **கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான்** யோசுவா 11 : 15 வாசித்துப் பாருங்கள் **"கர்த்தர் தமது தாசனாகிய மோசேக்கு எப்படி கட்டளையிட்டிருந்தாரோ, அப்படியே மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டிருந்தான்; அப்படியே யோசுவா செய்தான்; அவன், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டதில் ஒன்றையும் செய்யாமல் விடவில்லை."** நாமும் தேவன் சொன்ன கற்பனைகள், நியாயப்பிரமாண வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படியும் போது வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்வோம்.

மூன்றாவது, யோசுவா தேவனுடைய ஆவியில் நிரப்பப்பட்டிருந்தான். உபாகமம் 34 : 9 **"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்."** தேவ ஆவியில் நிரப்பப்பட்டபடியால் அவனுக்குள் விசுவாசம், சத்துருக்களை எதிர்த்து நிற்கவும், போராடவும் பெலன் கிடைத்தது. நமக்கும் இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணின பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவோம், பெலன் கொள்வோம். சாட்சிகளாய் ஜீவிப்போம். தேசத்தை தேவனுக்காக சுதந்தரிப்போம். நாமும் தேவன் தந்த வாக்குத்தத்தங்களை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலும், ஊழியப்பாதையிலும் பெற்றுக் கொள்வோம்.

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார். 1தெச. 5 : 24 வசனத்தின்படி தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.



# கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆதிவாசி மக்கள் கொண்டாட உதவுங்கள்

**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி".** யோவான் 1:9

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல் அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வரையில் உதவி செய்ய கர்த்தர்தாமே பலப்படுத்துவாராக!

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலும் கொடுத்து வருகிறோம்.

இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 10 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் **ஒரு சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு பில் ஆதிவாசி மாணவருக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ,** கிறிஸ்துமஸ் வெகுமதியாக அக்டோபர் அல்லது நவம்பர் மாத ஆதரவுத் தொகையோடு சேர்த்துக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் ஊழியர், பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



*"...மிகவும் சிறியவரராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".* -இயேசு (மத்தேயு 25:40)

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ்-ஐ வரவேற்று, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# ஞாபகப்படுத்துகிறோம்



***அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு,***

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாகப் படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் ***9698944522*** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## *உங்களுக்காக ஜெபிக்கிறோம்...*



**அன்பான ஆதரவாளர்களே!** உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக் குறிப்புகளை **அன்பு பகிர்வு இயக்கம்** தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

தொடர்புக்கு : 9698044522

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>Shalom Chennai Branch Office,<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>Bethel,<br>25-7/A 1-Block 25, Paruthivilai,<br>Kannakode, Marthandam - 629165<br>Cell : 9487689869 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/O P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. John Sridhar**<br>SHARING LOVE MISSION Branch<br>Ebenezer Plaza, Parama Nagar,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9698844511 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9382955663 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

### ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **"வருமான வரிவிலக்குச் சான்று"** ***(80G)*** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. சாகன் காமோர் — வான்காட்**

கம்பிலா என்ற சகோதரி 6 மாதமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புதமாக விடுதலைக் கொடுத்தார்.

**Pr. நவால்சிங் பில்வாள் — கலாலிவாட்**

ரூபாபேன் என்ற சகோதரி 5 வருடமாக அசுத்த ஆவியின் பிடியினில் சிக்கி மிகவும் அலைக்கழிக்கப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அசுத்த ஆவிகளின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**Pr. தினேஷ் நினாமா — களிமாகுடி**

கமலிபேன் என்ற சகோதரி நெஞ்சு வலி மற்றும் இடுப்பு வலியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்குக் கொண்டுவந்து, இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் இவரது வலிகளிலிருந்து அற்புத சுகம் தந்தார்.

**Pr. கோர்சிங் டாமோர் — புரக்குவா**

ராளா என்ற சகோதரனின் மனைவியின் பிரசவ நேரத்தில், வயிற்றிலிருக்கும் குழந்தையின் தலை திரும்பவில்லை, ஆகவே தாயின் உயிருக்கோ அல்லது பிள்ளையின் உயிருக்கோ ஆபத்து நேரிடும் என மருத்துவர்கள் கூறினார்கள். ஆகவே இவருக்காக சபையார் அனைவரும் இணைந்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டு இருவரையும் காப்பாற்றினார்.

**Pr. கேம்சந்த் மாவி — போர்கேடா**

நோவாபாய் என்ற சகோதரன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இவர் திடீரென வியாதிப்பட்டார். இவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றும் குணமாகவில்லை. பின்பு இவரை நமது ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்து, இவருக்காக கண்ணீரோடு ஜெபித்தபோது தேவன் மனமிரங்கி அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. வார்சிங் பர்மார் — சிமளியா**

கங்காபேன் என்ற சகோதரி 8 வருடமாக உதிரப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டார். மிகவும் சோர்ந்து போன நிலையில் ஷாலோம் சபைக்கு இவரை அழைத்து வந்தார்கள். அங்கு இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.

**Pr. கமலேஷ் சங்காடா — போர்பானி**

ரீதாபேன் என்ற சகோதரி வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்கு இயேசுவைக் குறித்துக் கூறி, சபைக்கு அழைத்து வந்து சபையில் அனைவரும் இணைந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது, தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.

**Pr. பிரேம் சங்காடா — தாகோத்**

கங்கேலா கிராமத்தைச் சேர்ந்த ஒரு சகோதரி அசுத்த ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்கு கொண்டு வந்தார்கள். இவருக்காக பாரத்துடன் தேவனிடம் வேண்டியபோது, தேவன் ஜெபத்தைக் கேட்டு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலைக் கொடுத்தார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. பவ்ஜி கராசியா குண்டா**

கௌரி என்ற சகோதரி அசுத்த ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். சபையில் அனைவரும் இணைந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலை கொடுத்தார்.

**Pr. துலா கராசியா ரோகன்யாமன்னா**

பசுபாய் என்ற சகோதரன் 15 ஆண்டுகளாக அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**Pr. துலேஷ்வர் கராசியா கீஜா மெகாஜி**

கலாபாய் என்ற சகோதரனின் கண்ணில் ஆப்ரேஷன் செய்தும் கண் பார்வை சரியாக தெரியவில்லை. மூன்று வாரங்கள் தொடர்ந்து ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் நல்ல கண் பார்வையைக் கொடுத்தார்.

**Pr. தினேஷ் கோதா சர்வாணி**

வருண் பேன் என்ற சகோதரியின் குடும்பத்தில் அநேக பிரச்சனைகள் இருந்து வந்தன. மேலும் ஆடு, மாடுகள் தீடீரென இறந்தன. இதற்காக ஷாலோம் சபையில் நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்டு மிகவும் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பிரச்சனைகளை மாற்றி, சமாதானத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. தனீஸ்வர் புரியா பிஜல்பூர்**

அர்ஜுன் என்ற சகோதரன் காய்ச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. துல்ஜி கராசியா குண்டிபாடா**

கம்லா என்ற சகோதரி 5 மாதங்களாக வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இவரை நமது ஷாலோம் சபைக்கு, ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஜெபத்தினைக் கேட்டு அற்புத சுகத்தினைக் கட்டளையிட்டார்.

**Pr. வால்சிங் டின்டோட் ஹட்டியா**

டித்து என்ற சகோதரிக்கு வாய் பகுதியில் புண்கள் அதிகமாய் காணப்பட்டன. இவருக்காக ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தினைக் கட்டளையிட்டார்.

காளியா என்ற சகோதரன் வயிறு வலியினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த நேரத்தில் இவரை நமது ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தினைக் கொடுத்தார்.

**Pr. கல்சிங் பார்கி தெபரி**

பரித்தேஷ் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்குக் கொண்டு வந்து இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. அபிஷேக் நினாமா பிப்பாலிபாடா**

பச்சுபாய் என்ற சகோதரன் பக்கவாத நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் இவரது பக்கவாத நோயிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**Pr. அணில் கனாவா ஹிரோலா**

ரமேஷ் என்ற சகோதரன் 10 நாட்களாக காய்ச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை நமது சபைக்கு அழைத்து வந்தார்கள். அவருக்காக ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கட்டளையிட்டார்.

**Pr. பாபு டாமோர் நாத்துதாமனி**

ரம்து என்ற சகோதரி 10 வருடங்களாக குழந்தை இல்லாமல் மிகவும் வேதனையோடிருந்த நேரத்தில் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஷாலோம் சபையில் நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்டு கண்ணீரோடு ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**Pr. பாபுலால் மச்சார் ரூபிகூட்டா**

ரமேஷ் டாமோர் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இவருக்காக ஜெபிக்கும்படி இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக பாரத்தோடு ஜெபித்த போது ஜெபத்தைக் கேட்டு தேவன் பிசாசின் பிடியிலிருந்து அற்புத விடுதலை கொடுத்தார்.

**Pr. சமாரியா பாகேல் போர்டியா**

ஒரு சகோதரி உதிரப்போக்கினால் 4 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருந்தார். அதிகளவில் மருத்துவம் பார்த்தும் மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லாமல் இறுதியாக ஷாலோம் சபைக்கு ஜெபிக்கும்படியாக வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமான சுகத்தினைக் கட்டளையிட்டார்.

சபரி என்ற சகோதரன் வியாதியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு கொண்டுவந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் வியாதியின் படுக்கையை மாற்றி அற்புத சுகத்தினைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**Pr. வால்சிங் சாரல் கக்வானி**

துளி என்ற சகோதரியின் பேரப்பிள்ளை வியாதியோடு போராடிக்கொண்டிருந்தது. இந்த பிள்ளையை ஷாலோம் சபைக்கு கொண்டு வந்து, அதற்காக பாரத்தோடு ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. புர்சிங் டாமோர் பாடா கேடா**

பூரா என்ற சகோதரன் பிழைப்பிற்காக வைத்திருந்த 5 ஆடுகளும் நோய்வாய்ப்பட்டு மரிக்கும் தருவாய்க்குச் சென்றன. என்ன செய்வதென்று இந்த சகோதரன் திகைத்து நின்ற தருவாயில் இவருக்காக ஜெபித்தபோது ஜெபத்தைக் கேட்ட தேவன் ஆடுகளை குணமாக்கி குடும்பத்தில் சமாதானத்தைக் கட்டளையிட்டார். அதன்பின் இந்த குடும்பத்தார் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

**பத்து லட்ச ஆத்தும அறுவடைத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் சுகமளிக்கும் ஆராதனைகளில் நிகழ்ந்த அற்புத சாட்சிகளில் ஒரு சில...**



பெயர் : **ரீசம் பேன்,** வயது: 36

ஊர் : கேடா, இராஜஸ்தான்

எனது பெயர் ரீசம் பேன். எனக்கு 2 வருடமாக காது கேட்காமல் இருந்தது. அதோடு கூட எனக்கு அதிகமாக தலைச் சுற்று வரும். இப்படியாக நான் மிகவும் கஷ்டப்பட்டேன். இந்நிலையில் இராஜஸ்தான் மாநிலத்தில் ஷாலோம் கோடா கிராம ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தைக் குறித்து கேள்விப்பட்டு, கலந்து கொண்டேன். அங்கு ஊழியர் தேவ செய்தியளித்து ஜெபித்த போது எனக்கு சுகம் கிடைத்தது. இப்போது என்னால் நன்றாக கேட்க முடிகிறது. எனக்கு இருந்த தலைச் சுற்றும் இப்போது இல்லை. **எனக்கு சுகம் கொடுத்த இயேசுவுக்கு நன்றி!**

---



பெயர் : **ரமு பேன்,** வயது : 38

ஊர் : தாடுகா, இராஜஸ்தான்

நான் பிறந்ததிலிருந்தே எனது வயிற்றில் கட்டி இருந்தது. சுமார் 38 வருடங்கள் இந்த கட்டியினிமித்தம் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் ஒரு பயனுமில்லை. இந்நிலையில் இராஜஸ்தானிலுள்ள தாடுகா கிராம சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் நான் விசுவாசத்துடன் பங்கு பெற்றேன். கூட்டத்தின் இறுதியில் வியாதியஸ்தர்களுக்காக ஏறெடுக்கப்பட்ட விசேஷ ஜெபத்தில் என் மீது தேவனுடைய வல்லைமை இறங்கியதை உணர்ந்தேன். உடனே எனது வயிற்றில் இருந்த வலி மறைந்தது. மறுநாள் 38 வருடம் இருந்த கட்டி தானாக உடைந்து போனது. **இப்போது நான் நன்றாக உள்ளேன். தேவனுக்கே மகிமை!**

---



பெயர் : **ஜித்தா பேன்,** வயது : 59

ஊர் : பிலடி, இராஜஸ்தான்

நான் இயேசுவை அறியாதவள். நான் கூலி வேலைக்காக வெளியூர் சென்றிருந்தேன். அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் போது தவறி கீழே விழுந்ததில் எனது கைகளும் கால்களும் செயலிழந்து போனது. என்னால் நடக்கவோ எந்த வேலையும் செய்யவோ முடியாமல் போனது. நான் படுத்த படுக்கையாகிவிட்டேன். இந்நிலையில் தாடுகா கிராமத்தில் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, அங்கு சென்றால் இயேசு சுகம் தருவார் எனக் கேள்விப்பட்டு என்னை கட்டிலில் தூக்கிக் கொண்டு சென்றார்கள். அங்கு கூட்டத்தில் ஊழியர் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த போது, எனது கைகளிலும், கால்களிலும் பெலன் வந்தது. உடனே நான் எழுந்து நடந்தேன். கூட்டம் முடிந்தவுடன் நானே 1 கி.மீ தூரம் நடந்து எனது வீட்டிற்கு சென்றேன். **எனக்கு சுகம் கொடுத்த இயேசப்பாவிற்கு ஸ்தோத்திரம்!**



# "முன்மாரியும், பின்மாரியும்"

## நாகர்கோவில் & சென்னை மிஷனெரி தரிசனக் கூடுகைகள்

**"...உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்."** யோவேல் 2 : 23

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் பணி செய்துவரும் ஷாலோம் ஊழியத்தில் இந்த ஆண்டு மிகவும் அசாதாரணமான வளர்ச்சியினை தேவன் தந்துள்ளார். இரட்சிக்கப்படுகிறவர்கள் அநுதினமும் ஷாலோம் சபைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக வெள்ளிக்கிழமைதோறும் பணித்தளங்களில் நடைபெற்றுவரும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களில் ஏராளமான அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்று வருவதால் குடும்பம் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்று ஜனங்கள் ஷாலோம் சபைகளில் சேர்ந்து வருகின்றனர். சபைகளில் விசுவாசிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவருவதால், ஊழியர்களின் தேவைகளும் பெருகி வருகிறது. ஊழியர்களின் எண்ணிக்கை கூடுவதால் அவர்களைத் தாங்கும் ஆதரவாளர்களும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு, நம் ஷாலோம் ஊழியத்தினை மனதார நேசிக்கும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களைக் கொண்டு கடந்த ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி நாகர்கோவிலிலும், 24 ஆம் தேதி சென்னையிலும் **மிஷனெரி தரிசனக் கூடுகைகள்** நடத்தப்பட்டன.

நாகர்கோவிலில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் 23ஆம் தேதி கூட்டத்திற்கு ஆயத்தமாக அதற்கு முந்தினநாள் 22 ஆம் தேதி ஜெப வீரர்களும் தன்னார்வத் தொண்டர்களும் மைதானத்தில் கூடி ஜெபம் செய்து ஆயத்தப் பணிகளை செய்தனர். ஆயத்தப்பணிகளை சரிவர செய்ய முடியாத வகையில் அன்று கன மழை பெய்தது. மறுநாள் எப்படித்தான் கூட்டம் நடத்த முடியுமோ? என்று விசுவாசத்தை சோதிக்கும் அளவிற்கு இருந்தது. ஆனால் அதிகமாக ஜெபித்து ஆயத்தப்பணிகளை விசுவாசத்துடன் நிறைவேற்றினார்கள். 23 ஆம் தேதி மாலை 6 மணிக்கு இயேசு விடுவிக்கிறார் குழுவினர் மேடைக்கு வந்தனர். **சகோ. சாம் ஜெபராஜ்** அவர்கள் ஆரம்ப ஜெபத்தினை ஏறெடுத்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள். **சகோ. மோகன் ராஜ்** அவர்கள் பாடல்களைப் பாடி ஆராதனை நேரத்தை சிறப்பாக நடத்தினார்கள். **இயேசு விடுவிக்கிறார் குழுவினர்** நிகழ்ச்சிகளுக்கு சிறப்பாக இசையமைத்துத் தந்தனர். மழை சிறு சிறு துளிகளாய் தரையில் விழுந்தது. விசுவாசிகள் அனைவரும் எங்கும் கலைந்து செல்லாமல் விசுவாசத்தோடு ஜெபித்து காத்திருந்தார்கள். ஒரு காற்று பலமாக வீச மேகங்கள் கலைந்து மழை சற்று ஓய்வு எடுத்துக் கொண்டது.

CSI கன்னியாகுமரி திருமண்டல முன்னாள் பேராயர் அருட்பெருந்திரு. **M.I. கேசரி** அவர்கள் ஆசீ வார்த்தைகளைக் கூறி தலைமையுரையாற்றினார்கள். நமது ஷாலோம் மார்த்தாண்டம் கிளை பொறுப்பாளர் **சகோ. செல்வதுரை** அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் பீல் ஆதிவாசி சிறுவர்கள் தங்கள் சாட்சிகளை பகிர்ந்து கொள்ள **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழியாக்கம் செய்ததோடு, பணித்தள ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார நடனம் நடைபெற்றது. **சகோ. டைட்டஸ்** & **சகோ. சாம் குணசீலன்** இருவரும் பல

இன்னல்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியில் மேடையில் ஒளிபரப்பிய பணித்தள ஊழிய வீடியோ காட்சிகள் மக்கள் மனங்களை ஆழமாக தொட்டன. **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் தனது சாட்சியினையும் பணித்தளங்களில் நடைபெற்றுவரும் எழுப்புதலின் வேகத்தையும் எடுத்துரைத்தார்கள். இறுதியாக **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் வல்லமையான தேவ செய்தியை அளித்தார்கள். அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஆத்ம பாரம் ஏற்படும்படியாக தேவ ஆவியானவர் அசைவாடினார்.

காணிக்கை பாடலினை பேராயரின் பிள்ளைகள் மூன்று பேரும் பாட, அதற்கு **சகோ. ஃபிராங்கிளின்** அவர்கள் இசை மீட்டினார்கள். அந்த நேரம் வந்திருந்த ஜனங்கள் பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் ஷாலோம் ஊழியங்களில் தங்களது ஈடுபாட்டினையும், ஊழியங்களைத் தாங்கும்படியான வாக்குறுதிகளையும் செய்து அர்ப்பணிக்கும் ஒரு ஆவியானவரின் வேளையாக இருந்தது. இறுதியாக **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் அங்கு கூடியிருந்த அனைத்து குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க **அருள்திரு. ஜாண் பீட்டர்** அவர்கள் ஆசீர்வாதம் கூற காத்திருந்த மழையும் மெல்ல தன் தலையைக் காட்டியது.

இதே போல் மறுநாள் ஆகஸ்ட் 24 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை பட்டணத்தில் St. ஜார்ஜ் மேல் நிலைப் பள்ளி மைதானத்தில் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகைக்கான ஆயத்தங்கள் சிறப்பாக செய்யப்பட்டு, சரியான நேரத்தில் கூட்டம் ஆரம்பமானது. **Dr. ஜாலி ஏபல்** அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்ய நிகழ்ச்சிகள் சிறப்பாக ஆரம்பமாயின. **Pr. ஆல்வின் தாமஸ்** அவர்கள் (ரூஹா ஊழியங்கள் சென்னை) பாடல் வேளையையும் ஆராதனை நேரத்தையும் மிக சிறப்பாக நடத்தித் தந்தார்கள். அவரது குழுவினர் நிகழ்ச்சிகளுக்கு சிறப்பாக இசையமைத்துத் தந்தார்கள். நிகழ்ச்சிகளை **சகோதரி. ரோஸ்லின்ட் ரெக்ஸ்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சார நடனம் நடைபெற்றபின், பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் ஆதிவாசி சிறுவர்கள் தங்கள் சாட்சிகளைக் கூற **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழியாக்கம் செய்து ஷாலோம் ஊழியத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்கள். **சகோ. டைட்டஸ் & சகோ. சாம் குணசீலன்** இருவரும் மேடையில் ஒளிபரப்பிய பணித்தள ஊழிய வீடியோ காட்சிகள் பணித்தள சாட்சிகளுக்கு உயிரூட்டுவதாக அமைந்தன.

**சகோ. ஷாலோம்** அவர்கள் தனது மேற்படிப்பினை முடித்ததும் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்யப்போவதைக் குறித்து சாட்சியாகப் பகிர்ந்தார்கள். பேராயரின் பிள்ளைகள் **சகோ. டைட்டஸ், சகோ. ஷாலோம்** மற்றும் **சகோதரி. ஷெக்கினா** ஆகிய மூவரும் காணிக்கைப் பாடலைப் பாடினார்கள். இந்தப் பாடலுக்கு **சகோ. ஃபிராங்கிளின்** அவர்கள் இசை மீட்டினார்கள். **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் தேவன் தனக்குத் தந்த அழைப்பையும் தரிசனத்தையும் பற்றி உருக்கமாக எடுத்துரைத்தார்கள். **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தேவனுடைய செய்தியை வல்லமையாக பகிர்ந்து கொண்டார்கள். அங்கு கூடியிருந்தோர் அனைவரின் உள்ளத்திலும் ஷாலோம் ஊழியத்தின்

மூலம் சந்திக்கப்படும் பீல் மக்கள் மீது ஆத்ம பாரம் கொள்ள தேவ ஆவியானவரால் உந்தப்பட்டார்கள். கூடியிருந்த மக்கள் மன நிறைவோடு ஷாலோம் ஊழியத்தை பல விதத்திலும் தாங்குவதாக வாக்குக் கொடுத்தார்கள். **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் அனைத்து குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக ஊக்கமாக ஜெபித்து அனைவரையும் ஆசீர்வதித்து அனுப்பினார்கள். அனைத்து நிகழ்வுகளும் முடிந்தவுடன் பலமான காற்று ஒன்று வீச மழை மேகங்கள் மைதானத்தின் மேல் தவழ்ந்து வந்தன. ஒரு நாளும் பெய்யாத பின் மாரி மழை அன்று இரவு சென்னை பட்டணத்தில் பெய்து, ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகையை மனநிறைவோடு நிறைவு செய்ய உதவியது.

இந்த இரு கூடுகைகளிலும் அநேக புதிய ஆதரவாளர்கள் ஷாலோம் ஊழியங்களை பல விதங்களில் தாங்குவோம் என வாக்குக் கொடுத்துள்ளனர். நாகர்கோவிலில் முன் மாரி மழையையும் சென்னையில் பின் மாரி மழையையும் பெய்யச் செய்து, இயற்கையை படைத்த தேவன் இரு கூட்டங்களையும் ஆசீர்வதித்து மகிழ்வித்தார். **தேவனுக்கே மகிமை!**

இந்த இரு தரிசனக் கூடுகைகளுக்காக ஜெபித்தவர்கள், தன்னார்வத்துடன் செயல்பட்டவர்கள், இதற்காக உழைத்த ஷாலோம் செயற்குழு உறுப்பினர்கள், ஷாலோம் முழு நேர ஊழியர்கள், ஷாலோம் பிரதிநிதிகள், தியாகத்தோடு தங்கள் பங்கினைக் கொடுத்தவர்கள் ஆகியோருக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். கூட்டங்களில் குடும்பத்தோடு பங்கு பெற்று ஆதரவு தர வாக்குக் கொடுத்தவர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். 7000 கிராமங்களில் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்களை இரட்சிக்கும் பணியில் தேவன் முன் குறித்த இவர்களை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!. **கர்த்தர்தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தையும், நீங்கள் செய்துவரும் பணிகளையும், தொழில்களையும், ஊழியங்களையும் பன்மடங்காக ஆசீர்வதிப்பாராக!**

## ஷாலோம் நாகர்கோவில் கிளை அலுவலகம்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி நாகர்கோவிலில் 21.09.2014 முதல் நமது ஷாலோம் ஊழியத்தின் கிளை அலுவலகம் செயல்பட்டு வருகிறது என உங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். **சகோ. செல்வதுரை** மற்றும் **சகோ. ஜாண் ஸ்ரீதர்** அவர்கள் ஊழிய முன்னேற்ற பணியில் செயல்பட்டு வருகிறார்கள். நாகர்கோவில் பகுதி ஆதரவாளர்கள் தங்கள் காணிக்கைகளை இந்த அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுத்து இரசீதினை பெற்றுக் கொள்ளலாம். அல்லது தொலைபேசி மூலமாக எங்களது ஊழியர்களைத் தொடர்பு கொண்டால் அவர்கள் நேரில் வந்து உங்களிடம் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு இரசீதினை வழங்குவார்கள்.

| | |
|---|---|
| **நாகர்கோவில்<br>கிளை அலுவலக முகவரி** | **SHARING LOVE MISSION**<br>**Shalom Branch Office,**<br>Ebenezer Plaza, Parama Street, WCC Junction,<br>Nagercoil - 629 001 Ph : 9698844511 |

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை - நாகர்கோவில் (23.08.2014)



பாடல் & ஆராதனைவேளை – சகோ. மோகன் ராஜ் அவர்கள்



நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள்




தலைமை உரையாற்றும் கன்னியாகுமரி திருமண்டல முன்னாள் பேராயர். கேரி அவர்கள்



தேவ செய்தியளிக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



பணித்தள செய்தியளிக்கும் பிஷப். தேவதாஸ் அவர்கள்



[illegible] தேவதாஸ் அவர்கள்




பிஷப். தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக சிறப்பு ஜெபம்



சிறப்புப் பாடல் வேளை



இறுதி ஜெபத்தினை ஏறெடுக்கும் Rev. ஜாண் பீட்டர் அவர்கள்

# இயேசு விடுவிக்கிறார் குழுவினரின் பணித்தள வருகை & ஊழியர்களுக்கான சிறப்பு ஜெப முகாம்





பாடல் & ஆராதனை



கலாச்சார வரவேற்பு



கூடியிருந்த குஜராத் & ம.பி. பீல் சுதேச ஊழியர் குடும்பங்கள்



தேவ செய்தியளிக்கும் சகோ. சாம். ஜெபராஜ் அவர்கள்



தேவ செய்தியளிக்கும் சகோ. ரூபன் அவர்கள்





சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்பட தேவனிடம் கண்ணீரோடு கதறி அழும் பீல் சுதேச ஊழியர் குடும்பங்கள்

## 48 ஊழியர் குடும்பங்களுக்கான சிறப்புக் கூடுகை & 10 இலட்சம் ஆத்தும அறுவடை திட்டத்திற்காக இயேசு விடுவிக்கிறார் மூலமாக வழங்கப்பட்ட உபகரணங்கள்



பாடல் & ஆராதனை வேளை



தேவ செய்தி – சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள்



தேவ செய்தி – சகோ. ரூபன் அவர்கள்





கூடியிருந்த 48 பில் சுதேச ஊழியர் குடும்பங்கள்



வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள்



வாகனங்கள் மற்றும் உபகரணங்களுடன் பிஷப். தேவதாஸ் அவர்கள் குடும்பமும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களும்



ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்கள்



வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்களுடன் பில் சுதேச ஊழியர் குடும்பங்கள்

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை - சென்னை (24.08.2014)



ஆரம்ப ஜெபம் – Dr. ஜாலி ஏபல் அவர்கள்



நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் சகோதரி. ரோஸ்லின்ட் ரெக்ஸ் அவர்கள்



பாடல் வேளை



ஆராதனை வேளை – Pr. ஆல்வின் தாமஸ் அவர்கள்



தேவ செய்தியளிக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



பணித்தள செய்தி பிஷப். வே. தேவதாஸ் அவர்கள்



பீல் ஆதிவாசி பணியாளர்கள் & ஊழியர்களின் சாட்சியினை மொழி பெயர்க்கும் சகோதரி. வசந்தா தேவதாஸ் அவர்கள்



கூடியிருந்த தேவ ஜனங்களில் ஒரு பகுதி



பிஷப் தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக சிறப்பு ஜெபம்

## இயேசு விடுவிக்கிறார் குழுவினரின் பணித்தள வருகை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஆகஸ்ட் மாதம் 5,6,7 ஆகிய தேதிகளில் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் குழுவினர்கள் **சகோ. சாம் ஜெபராஜ், சகோ. ஜெபசிங், சகோ. ரூபன்** ஆகியோர் நமது பணித்தளத்திற்கு வருகை தந்திருந்தார்கள். விசேஷமாக தேவன் தந்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு ஜெபம் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தி குஜராத், மத்தியபிரதேசம் இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் உள்ள நமது ஷாலோம் ஊழியர்களுக்கென்று விசேஷ ஜெப முகாம் நடத்தப்பட்டது. குஜராத் மற்றும் மத்தியபிரதேசம் ஊழியர் குடும்பங்களுக்கு 5–ம் தேதி தாகோதில் உள்ள சி.என்.ஐ சபை ஹாலில் வைத்து நடைபெற்றது. இதில் குஜராத் மற்றும் மத்தியபிரதேச ஊழியர்கள் குடும்பமாக பங்கு பெற்றார்கள்.

அதேப் போன்று 6–ம் தேதி இராஜஸ்தான் கோய்கா பேராலயத்தில் வைத்து இராஜஸ்தான் ஊழியர் குடும்பங்களுக்கென்று ஜெப முகாம் நடத்தப்பட்டது. இதில் இராஜஸ்தான் ஊழியர்கள் குடும்பமாக பங்கு பெற்றனர். இவ்விரு முகாம்களிலும் துதி ஆராதனை வேளையில் ஊழியர்கள் உற்சாகமாக நடனமாடி தேவனைத் துதித்தார்கள். ஆராதனை வேளையில் தேவ மகிமை ஒவ்வொருவர் மீதும் இறங்கியது. அதைத் தொடர்ந்து **சகோ. சாம் ஜெபராஜ்** அவர்கள் தரிசனம் நிறைவேற நாம் எப்படி ஆயத்தமாக வேண்டும் என்ற தலைப்பில் செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். செய்தியின் மூலம் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். தொடர்ந்து 3 மாநிலங்களில் நடைபெறும் ஊழியங்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து **சகோ. ரூபன்** அவர்கள் செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள்.

கலந்து கொண்ட அனைத்து ஊழியர்களும் ஆசீர்வதிக்கப்பட்டனர். ஆவியானவர் ஜெப வேளையின் போது அனைவர் மீதும் இறங்கினார். அனைவரும் ஆவியில் புது பெலனை பெற்றுக் கொண்டார்கள். 2017–க்குள் 10 இலட்சம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டும் என்ற விசுவாசமும் பாரமும் ஊழியர்களிடையே அதிகமானது. கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

## முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும். தொடர்புக்கு : 9698144522

## 48 ஊழியர் குடும்பங்களுக்கான விசேஷக் கூடுகை

ஷாலோம் ஊழியம் மற்றும் இயேசு விடுவிக்கிறார் ஊழியம் இணைந்து செயல்படுத்தும் 10 இலட்ச ஆத்துமாக்கள் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டங்களில் நடக்கும் அற்புதங்களின் மூலம் ஆயிரமாயிரமாய் புதிய ஆத்துமாக்கள் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

ஏற்கனவே இயேசு விடுவிக்கிறார் மூலம் கொடுக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் சாதனங்கள் மூலம் ஒவ்வொரு கிராமங்களிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் இத்தரிசனத்தில் தேவனால் பயன்படுத்தப்படும் 48 ஊழியர்களின் குடும்பங்களுக்கென்று விசேஷக் கூடுகை தாகோத்தில் ஆகஸ்ட் மாதம் 7ம் தேதி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் இறங்கி வந்தது. பின்பு **சகோ. சாம் ஜெபராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். தொடர்ந்து **சகோ. ஜெபசிங்** அவர்கள் சில ஆலோசனைகளை வழங்க **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. ரூபன்** அவர்கள் விசேஷ செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஜெப வேளையில் கர்த்தருடைய ஆவியானவர் அனைவர் மீதும் பலமாய் இறங்கினார். அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். பின்பு பத்து இலட்ச ஆத்தும அறுவடை திட்டத்திற்கென இயேசு விடுவிக்கிறார் மூலம் வழங்கப்பட்ட புதிய வாகனங்கள் மற்றும் சாதனங்களை **சகோ. சாம் ஜெபராஜ்** அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள்.

தேவனுடைய தரிசனத்தை இன்னும் விரைவாக நிறைவேற்றும்படியாக டாடா மேஜிக் வாகனங்கள் 4, ஜெனரேட்டர்கள் 4, ஆம்பிளிஃபயர்கள் 4, மைக் செட் 4, ஆடியோ மிக்சர்கள் 4, புகைப்பட கருவிகள் 4 ஆகியவை அளிக்கப்பட்டன.

## ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே,** கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டுவருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்திய தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

# ஷாலோம் சென்னை கிளை அலுவலகம்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி கடந்த ஆகஸ்டு மாதம் 24ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற **ஷாலோம் மிஷனெரி தரிசன கூடுகையில்** உங்களில் அநேகர் பங்கு பெற்று பீல் மக்களை குறித்ததான பாரத்தையும், தரிசனத்தையும் பெற்றுச் சென்றீர்கள். உங்களில் சிலர் மிஷனெரி பணிக்கான காணிக்கைகளை **தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கும்,** ஷாலோம் சென்னை கிளை அலுவலக ஊழியர்களிடத்திலும் கொடுத்து அனுப்பியிருந்தீர்கள். அதற்காக நன்றி கூறுகிறோம்.

சென்னையில் நமது ஷாலோம் கிளை அலுவலகம் இயங்கி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இதில் **சகோ. சுதந்திரசிங்** (ஷாலோம் செயற்குழு உறுப்பினர்) அவர்கள் தலைமையில் **சகோ. ஜாண் ஜெயசிங், சகோதரி. இந்திரா ஜாண், சகோ. ஜாண் ஸ்டான்லி, சகோ ஜார்விஸ் எபனேசர்** ஆகியோர் ஊழிய முன்னேற்ற பணியில் செயல்பட்டு வருகிறார்கள். **காணிக்கைகளை செலுத்த சுலபமான வழிகள் :**

- **SHARING LOVE MISSION** என்ற பெயரில் Money Order (or) D.D. (or) Cheque மூலமாக கூட தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.
- வங்கி ஆன்லைன் மூலமாக அனுப்புகிற வசதி உள்ளவர்கள் ஆன்லைன் மூலமாக பணம் அனுப்பலாம்.
- எங்களது வங்கிக் கணக்குகளில் தங்கள் காணிக்கைகளை செலுத்தலாம். (வங்கிக் கணக்கு எண்களை 32ம் பக்கத்தில் பார்க்கலாம்)
- சென்னை ஷாலோம் கிளை அலுவலகத்தில் நேரடியாகவும் செலுத்தலாம் அல்லது போன் மூலம் தொடர்பு கொண்டால் சென்னை ஊழியர்களோ அல்லது ஷாலோம் பிரதிநிதிகளோ உங்களிடத்தில் நேரில் வந்து காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு ரசீதினை வழங்குவார்கள்.

**குறிப்பு :** ஆன்லைன் மூலமாக அனுப்பும் ஆதரவாளர்கள், காணிக்கை அனுப்பியவுடன் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு **போன் மூலமாகவோ அல்லது SMS மூலமாகவோ அல்லது இ–மெயில் மூலமாகவோ தெரியப்படுத்த** அன்பாய் கேட்கிறோம். காணிக்கை யார் அனுப்பினார்? என்ற விபரம் எங்களுக்கு தெரியாத பட்சத்தில் நாங்கள் காணிக்கை அனுப்பிய ஆதரவாளர்களுக்கு இரசீது மற்றும் நன்றி கடிதம் அனுப்ப முடியாமல் போய் விடுகிறது. மேலும் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு, காணிக்கைகளை நாங்கள் பெற்றுக் கொண்ட விபரத்தை உடனடியாக SMS மூலமாக தெரியப்படுத்துகிறோம். மேலும் தபாலில் தங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதமும் அனுப்பி வைக்கப்படும்.

சென்னை கிளை அலுவலக முகவரி

**SHARING LOVE MISSION**
No. 102, 2nd Main Road, Sathya Nagar,
Padi, Chennai - 600 050.
Cell : சகோ. ஜாண் ஜெயசிங்–Cell :9698244577, சகோதரி. இந்திரா ஜாண்–Cell : 9698244588

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பரிசுத்த வேதாகமங்களின் தேவைகளுக்காக**

✞ தேவ கிருபையால் பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக இன்னும் 2000 வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100 வீதம் 2000 வேதாகமங்களுக்கான தேவைகளான ரூ. 2/– இலட்சங்கள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்,** அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

**வாலிபர் முகாம்களுக்காக**

✞ இந்த அக்டோபர் மாதத்தில் நமது பணித்தளங்களில் நடைபெறவுள்ள, வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள். இதில் திரளான வாலிபர்கள் கலந்து கொள்ளவும், அதில் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள். மேலும் முகாம்களுக்கு எதிராக எழும்பும் தடைகள் மறையவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறுகளுக்காக**

✞ இவ்வருடம் ஷாலோம் Mission Sunday குஜராத்தில் **05.10.2014** ஞாயிற்றுக்கிழமை அன்றும், மத்தியப்பிரதேசத்தில் **12.10.2014** ஞாயிற்றுக்கிழமை அன்றும், இராஜஸ்தானில் **19.10.2014** அன்றும் கொண்டாட தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம். ஸ்திர சபைகளாக, ஜெபிக்கும் சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக, தேவனுக்காக கொடுக்கும் சபைகளாக ஷாலோம் திருச்சபைகள் விளங்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப ஆசீர்வாத முகாமிற்காக**

✞ **அக்டோபர் 27 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை** குஜராத், ஆனந்த் பட்டணத்தில் நடைபெறவிருக்கும் நமது **பீல் சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்காக** ஜெபியுங்கள். இந்த முகாமில் ஊழியர்களின் பிரயாணம், தங்குமிடம், உணவு, அரங்கம், ஒலி, ஒளி அமைப்புகள், கால சூழ்நிலைகள் போன்றவற்றிற்காகவும், தேவ செய்தியளிக்கும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களையும் இதர ஊழியர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள்

**புதிய நாகர்கோவில் ஷாலோம் கிளை அலுவலகத்திற்காக**

✞ நாகர்கோவிலில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளை அலுவலகத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், அங்கு பணிபுரியும் தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்கவும், மேலும் அநேக தேவ ஜனங்கள் வந்து ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும், இந்த அலுவலகம் பீல் மக்களின் இரட்சிப்பின் பணியில் ஒரு தூணாய் விளங்கவும் ஜெபியுங்கள்.

# சகோதரி. ரமோலா S. பாபு அவர்களின் பணித்தள வருகை

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பட்டணத்தில் வசித்துவரும் நான் **(ரமோலா S. பாபு)** கடந்த 20 ஆண்டுகளாக வட இந்தியாவில் கர்த்தருடைய ஊழியங்கள் நடைபெற்றுவரும் மிஷனெரி பணித்தளங்களை பல மிஷனெரி ஸ்தாபனங்கள் மூலமாக பார்வையிட்டு வருகிறேன். ஆனால் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு அதற்காக ஜெபித்து வந்தேன். பேராயர். தேவதாஸ் அவர்கள் என்னை சந்திக்கும் போதெல்லாம் ஒரு முறையாவது பணித்தளத்திற்கு வந்து பாருங்கள் என்று அழைப்பு விடுப்பார்கள். அதற்காக ஜெபித்து வந்தேன். கடந்த ஆகஸ்ட் மாதம் கர்த்தர் அதையும் வாய்க்கச் செய்து, ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிட கிருபை தந்தார்.

அதன்படி நாகர்கோவிலில் இருந்து புறப்பட்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி இரவு ஷாலோம் பணித்தளம் அமைந்துள்ள குஜராத், தாகோத் பட்டணத்தை வந்தடைந்தேன். அதன்பின் பணித்தளப் பார்வையின் முதல் நாளான ஆகஸ்ட் 30–ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று **சகோதரர். சாமுவேல்** அவர்களோடு குஜராத்திலுள்ள போரடி மற்றும் தனசியா ஆகிய ஆலயங்களுக்கு சென்று ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு, வாழ்த்துதலைக் கூறவும், அங்குள்ள ஜனங்கள் மற்றும் ஊழியர்களைக் காணவும் தேவன் கிருபை செய்தார்.

அதைத் தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா கிராம சபையில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆராதனையில் பங்கு பெற்று, விசுவாசிகளுக்கு வாழ்த்துதலையும் ஆலோசனைகளையும் வழங்கினேன். தொடர்ந்து முண்டத் சபையின் ஆராதனையில் கலந்து கொண்டேன். அங்கு துதி ஆராதனை வேளையில் மக்களோடு சேர்ந்து ஆடிப்பாடி தேவனை துதித்தேன். ஆராதனை வேளையில் கர்த்தருடைய மகிமை இறங்கியது. பின்பு நான் **(சகோதரி. ரமோலா)** சபை எப்படி இருக்க வேண்டும் என்ற தலைப்பில் செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

மறுநாளான ஆகஸ்ட் 31ஆம் தேதியன்று குஜராத்திலுள்ள ஹிரோலா கிராமத்தில் நடைபெற்று வரும் Compassion Project – மூலம் நடைபெற்று வரும் சிறுவர் ஊழியங்களைப் பார்வையிட்டேன். அதைத் தொடர்ந்து கொலானா மற்றும் பாரேவா ஆலயங்களைப் பார்வையிட்டு, ஊழியர்களை சந்தித்து ஜெபித்தேன். அதைத் தொடர்ந்து தாகோத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த குஜராத் ஊழியக்காரிகள் மற்றும் மூப்பர்களின் மனைவிமார்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற தலைப்பில் தேவ செய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். செய்தியினை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். வார்த்தையின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். ஆராதனை வேளையில் ஊழியக்கார பெண்கள் கர்த்தரை உற்சாகமாக முழு உள்ளத்தோடு ஆராதித்தார்கள்.

3ஆம் நாளான செப்டம்பர் 1ம் தேதியன்று இராஜஸ்தானில் உள்ள ஷாலோம் மிஷன் நடுநிலை பள்ளி விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு சிறு சிறு கதைகளோடு கூட வேதத்திலிருந்து ஆலோசனை சொல்லி அனைத்து மாணவ மாணவியருக்கும் அன்பளிப்புகள் வழங்க தேவன் கிருபை செய்தார். மாணவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு வேத வசனத்தைக் கேட்டார்கள். அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் ஊழியக்காரிகள் மற்றும் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவும், ஊழியக்காரிகளோடு சந்தோஷமாக நடனமாடி தேவனை ஆராதிக்கவும் தேவன் கிருபை செய்தார். ஆராதனை வேளையில் தேவ பிரசன்னம் இறங்கி வந்ததை உணர முடிந்தது.

தொடர்ந்து அடியேன் தேவ செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். வசனத்தின் மூலம் அநேகர் பயன்பெற்றார்கள். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. இக்கூட்டங்களில் கொடுக்கப்பட்ட செய்தியிலிருந்து விசுவாசிகள் ஊழியக்காரிகள் மற்றும் மூப்பர்களின் மனைவிமார்கள் ஆகியோரிடம் கேள்விகள் கேட்டு, சரியான பதில் சொன்ன அனைவருக்கும் குடைகள் பரிசாக வழங்கி உற்சாகப்படுத்தினோம். இந்த விசேஷக் கூடுகைகளில் பங்கு பெற்ற அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இந்த 3 நாள் பணித்தளப் பார்வையையும், கூட்டங்களையும் தேவன் மிகவும் ஆசீர்வதித்து, பிரயாணங்களில் துணையாக இருந்து வழி நடத்தினார்.

எத்தனையோ பணித்தளங்களை நான் பார்வையிட்ட போதிலும் ஷாலோம் பணித்தளங்களில் பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டு, ஊழியங்களை நடத்தி வருவதை என்னால் பார்க்க முடிந்தது. ஊழியக்காரிகள், விசுவாசிகள் அனைவரும் கர்த்தருடைய வசனத்தை ஆவலோடு கேட்கும் போது என் உள்ளம் அவர்களுக்காக பாரம் கொண்டது. **பேராயர். தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்** இருவரின் கடின உழைப்பைப் பார்க்கும்போது கர்த்தர் அவர்களோடு இருந்து வழி நடத்தி வருகிறார் என்பதை உணர முடிந்தது.

தேவன் என் உள்ளத்தில் ஏவினபடி இந்த மக்களுக்கு 2000 வேதாகமங்களை வழங்க அவரே கிருபை பாராட்டினார். ஆனால் அது போதாது அவர்களுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், கொடுக்கவும் வேண்டும். இதை வாசிக்கின்ற நீங்களும் இந்த ஊழியங்களுக்காக ஜெபிப்பது மாத்திரமல்ல உங்களால் இயன்ற மட்டும் காணிக்கைகள் மூலமாக தாங்குங்கள். ஒரு முறையாவது பணித்தளத்தை சென்று பார்வையிட்டு தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுங்கள். **7000 கிராமங்களில் வசிக்கும் 1 கோடிக்கும் அதிகமான பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அனைவரும் இயேசு கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

பணித்தள பார்வைக்கான புகைப்படங்களை 35ம் பக்கத்தில் பார்க்கவும்...



# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்

**"கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" – அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும், சாராயத்தை காய்ச்சி குடித்தும், மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 23 ஆண்டுகளில் 500 க்கும் மேற்பட்ட பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 600 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/–க்குக் கொடுத்து வருகிறோம்.

கடந்த ஆண்டு 6000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபை தந்தார்.

இன்னும் இந்த ஆண்டு இறுதிக்குள் **2000 வேதப்புத்தகங்கள்** குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப்புத்தகத்தின் விலை **ரூ. 100**/- வீதம் 2000 வேதப்புத்தகங்கள் வாங்கி விசுவாசிகளுக்கு விநியோகம் செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



**"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது"....** (சங்கீதம் 19:7)

# *ஷாலோம் உபவாச ஜெபம்*

| நாள் | நேரம் |
|---|---|
| **11.10.2014,** *சனிக்கிழமை* | *காலை 10.00 மணிக்கு* |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**அனைவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிப்பதுடன், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.**

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும் சிறப்புக் கூடுகைகள்

### வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

நாள் : **01.10.2014 (புதன் கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.*** **கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

### ஷாலோம் உபவாசக் கூடுகை

நாள் : **11.10.2014 (சனிக்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – **628 008.**

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

நாள் : **25.10.2014** (சனிக்கிழமை)



நேரம் : **நள்ளிரவு 12.00 மணி முதல் மறுநாள்**
**நள்ளிரவு 12.00 மணி வரை (24 மணிநேரம்)**

**நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது ஒரு மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம். தொடர்புக்கு : 9698244522**

# அருள்திரு. சத்தியவான் ஈசாக்கு

தேவன் ஒன்றுமில்லாதவைகளிலிருந்து வியக்கத்தக்கவைகளை உண்டாக்குகிறார். அவர் எந்த மனிதனையும் தமக்கு பயனுள்ளவனாக மாற்றுகிறார் என்பதற்கு **அருள்திரு. சத்தியவான் ஈசாக்கு** சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

திருநெல்வேலி மாவட்டம் சீவலப்பேரி என்னும் கிராமத்தில் 1829 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் **நல்லக்கண்ணு.** அவர் தனது 7 வது வயதில் தன் தாயாரை இழந்தார். ஒரு நாள் ஆலயத்தில் அந்த ஆலய சபை ஊழியர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பிரசங்கித்தார். அதைக் கேட்ட **நல்லகண்ணு** இது உண்மை என்றால் என்னுடைய தாயாரும் ஒருநாளில் உயிர்த்தெழுந்து உயிரோடு வருவார்கள் என்று நம்பினான். அவன் கல்வி கற்க ஆசைப்பட்டான். ஆனால் அவருடைய தந்தையோ மாடுகளை மேய்க்க அவரை அனுப்பினார். சில திண் பண்டங்களை மாடு மேய்க்கும் போது சாப்பிட தந்தை கொடுத்தனுப்புவார். அவைகளை மாடு மேய்க்கத் தன்னோடு வரும் நண்பர்களுக்குக் கொடுத்து, தன்னுடைய மாட்டையும் மேய்க்கும்படி கூறிவிட்டு, பள்ளிக்குச் சென்றுவிடுவான். சாயங்காலம் பள்ளி முடிந்தவுடன் தன் நண்பர்களோடு சேர்ந்து மாடுகளுடன் வீட்டிற்கு வந்துவிடுவான். மாடு மேய்க்கும்போது ஒரு மரத்தடியில் உட்கார்ந்து நற்செய்தி நூலை ஆர்வத்துடன் படிப்பான்.

1845 இல் பண்ணைவிளையில் உள்ள **டக்கர் மிஷனெரி** சீவலப்பேரிக்கு வந்திருந்தபோது, அங்கு உள்ள சபை ஊழியர் **நல்ல கண்ணுடைய** ஊழிய ஆர்வத்தையும், நற்பண்புகளையும் மிஷனெரியிடம் கூறினார். அதைக்கேட்டு **டக்கர் மிஷனெரி** நல்ல கண்ணுவை தன்னோடு அழைத்துக் கொண்டு பண்ணைவிளைக்குச் சென்றார். **மிஷனெரி டக்கர் நல்லக்கண்ணுவுக்கு "ஈசாக்கு"** என்று பெயரிட்டு ஞானஸ்நானம் கொடுத்தார். பண்ணைவிளையில் சபை ஊழியராக **ஈசாக்கு** பணி செய்து வந்தார். 1850 ஆம் ஆண்டு **ராகேல்** என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். 1852 ல் இறையியல் கல்வி கற்றுக் கொள்ளச் சென்று 1859 ல் உதவி குருபட்டமும் பெற்றார். மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை தன் மந்தையை மேய்க்கும்படி ஒரு ஆயராக தேர்வு செய்த தேவனின் செயல் எத்தனை ஆச்சரியத்துக்குரியது.

பசியோடு இருக்கும் ஏழைகளுக்கு உணவளித்து, கஷ்டப்படுவோரின் கண்ணீரைத் துடைத்து, உபத்திரவப்படுவோருக்கு உதவிக்கரம் நீட்டி ஈசாக்கு இறைப்பணியை அர்த்தமுள்ளதாக்கினார். ஒரு முறை 27 அனாதை பெண்களுக்கு தனது சொந்த செலவில் திருமணம் செய்து வைத்தார். **அருள்திரு. ஈசாக்கு** அவர்கள் தெய்வ பக்தியுள்ளவர் மட்டுமல்ல சத்தியம் தவறாத சத்தியவான், இரக்க சிந்தையுள்ளவர். **ஈசாக்கு** அவர்கள் வீட்டில் மூட்டைபூச்சி இருந்தால் அதற்கு மருந்து அடிப்பதைத் தவிர்த்து இரவில் படுக்கைக்குச் செல்லும் முன்பு முழங்காற்படியிட்டு ஜெபித்துவிட்டு படுத்துவிடுவார். காலையில் எழும்பும்போது கட்டிலின் கீழே அனைத்து மூட்டைப் பூச்சிகளும் செத்துக் கிடப்பதைப் பார்த்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்வார்.

மற்றொரு முறை ஆலயத்தில் திருமண ஆராதனை ஒன்று நடந்தது. அப்பொழுது மாப்பிள்ளை வீட்டார் தாலி எடுத்துவரவில்லை. தாலி கட்ட வேண்டிய நேரத்தில் அவர்களுக்குள்ளே குழப்பம் ஏற்பட்டது. வீட்டிற்குச் சென்று தாலி எடுத்துவர 2 மணி நேரத்திற்கும் அதிகமாகும். இந்த நேரத்தில் **ஈசாக்கு ஐயரவர்கள்** தனது மனைவியை அருகில் அழைத்து தன் தாலியைக் கழற்றி கொடுக்கச் சொன்னார். மறு நிமிடமே பெண்ணின் கழுத்தில் மாப்பிள்ளை தாலியைக் கட்டிவிட்டார். என்னே பெருந்தன்மை!

**அருள்திரு. ஈசாக்கு அவர்கள்** தன்னிடம் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக அந்த பணத்தை பாளையங்கோட்டையில் உள்ள டயோசீசன் ஆபீஸிற்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார்கள். அப்பொழுது பஸ் வசதியெல்லாம் கிடையாது. ஐயரவர்கள் நடந்தே வந்தார்கள். வழியில் பெருங்குளம் என்ற ஊரின் குளத்தின் அருகே வரும்போது நன்றாக இருட்டிவிட்டது. இந்த நேரத்தில் தீடிரென 4 திருடர்கள் **ஈசாக்கு ஐயரவர்களை** வழிமறித்து ஐயரவர்கள் எடுத்துவந்த பணத்தை கேட்டார்கள். எந்த எதிர்ப்புமின்றி பணத்தை முழுவதும் திருடர்கள் கைகளில் கொடுத்துவிட்டு, வெறுங்கையோடு பண்ணைவிளை வந்து சேர்ந்தார்கள். மறுநாள் ஆசிரியர்களுக்கு சம்பளக் கூட்டம் ஒழுங்கு செய்திருந்தார். ஐயரவர்கள் எந்த கலவரமுமின்றி இரவு ஜெபித்துவிட்டு படுத்துக் கொண்டார்கள். நள்ளிரவில் ஐயரவர்களின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. எழுந்து பார்த்தால் அந்த 4 திருடர்களும் வந்திருந்தார்கள். **"அவர்கள் கூறினார்கள் :** பணத்தை வாங்கிக் கொண்டு எங்கள் வழியில் சென்றபோது, உருவிய பட்டயத்தோடு வெண்வஸ்திரம் தரித்த தூதர்கள் குறுக்கே நின்று வழி மறித்தார்கள். மேலும் எங்களை வேறு எந்த வழியிலும் செல்லவிடாமல் பண்ணைவிளை குருமனைக்கே எங்களை வரச் செய்தார்கள்". ஐயரவர்களின் வீடு தெரியாத கள்வர்கள் தூதர்களால் நடத்தப்பட்டு நேரடியாக அங்கு வந்து சேர்ந்தார்கள். ஐயரவர்களின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்கள், ஐயரவர்கள் அவர்களின் மீது இரக்கப்பட்டு கொஞ்சம் பணம் கொடுத்து சமாதானத்தோடு அனுப்பிவைத்தார்கள். இதைக் கேள்வியுற்ற மக்கள் **ஐயரவர்களை** சிறந்த தேவ ஊழியர் என்று மரியாதையுடனும் பக்தியுடனும் அவரது காலம் முழுவதும் நடந்து கொண்டார்கள்.

1904 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் ஐயரவர்கள் விண்ணகம் சேர்ந்தார்கள். அவர்களின் உடல் தேவாலய வளாகத்திலேயே புதைக்கப்பட்டு, இன்றும் மரியாதையுடன் போற்றப்படுகிறது. ஏதாவது தீர்க்கமுடியாத பிரச்சனை என்றாலும், உண்மை வெளியே வரவேண்டும் என்றாலும், யார் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதோ அந்த நபர் **ஈசாக்கு ஐயர் அவர்களின்** கல்லறை முன் நின்று தனக்குத் தெரிந்ததை சொல்ல வேண்டும். பொய் சொன்னால் சொன்ன நபரை தேவன் கொடிய வியாதியினால் தண்டிப்பார் என்ற நம்பிக்கை அந்தப் பகுதி மக்களிடம் இன்றும் உள்ளது.

புண்ணியவானாகிய சத்தியவான் ஈசாக்கு அவர்களின் சிறந்த வாழ்க்கையைப் பார்த்து ஏராளமான இந்து மக்களும் தேவனுடைய மந்தையில் சேர்ந்தார்கள். **இயேசுவுக்கே மகிமை உண்டாகட்டும்!**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 17

**பதில் எழுதுக :**

1. சிங்காசனத்தின் நடுவே எது விளங்கும்?
2. அநேகரை போஷிப்பவை எவை?
3. விசுவாசத்தினாலே நீதிமான் என்று சாட்சி பெற்றவன் யார்?
4. எவை, யார் மேல் நோக்கமாயிருக்கிறது?
5. நீதிமானுடைய வீட்டில் என்ன உண்டு?
6. எப்படி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்?
7. செபுலோன் தாயார் யார்?
8. கனம் பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் எவைகளுக்கு ஒப்பாயிருக்கிறான்?
9. ஆசாரியனின் ஆடுகளை மேய்த்தவன் யார்?
10. காணாமல் போன ஆடுகள் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.10.2014**

**கடந்த வேத வினா போட்டிக்கான சரியான விடைகள் :**

1. அர்கோப் – உபா. 3 : 4
2. வானம் – உபா. 28 : 12
3. சீனாயும் – நியா. 5 : 5
4. தாவீதை – 1 சாமுவேல் 18 : 3
5. வழியை – யோபு 28 : 26
6. சிறுமையானவனின் – சங். 140 : 12
7. வழியை விட்டு விலகுகிறவனுக்கு – நீதி. 15 : 10
8. மகதலேனா மரியாளுக்கு – மாற். 14 : 9
9. யோவான் 6 : 35 அல்லது யோவான் 4 : 8
10. சவுல் – அப். 9 : 22

**கடந்த வேத வினாப் போட்டி 16 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 25 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. மேபல் சாமுவேல், சென்னை. 2. Sis. ஆலிவ் ஜெயபாலன், கோவை. 3. Sis. சந்திரகுமாரி மோகன், நாகர்கோவில்.**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,

**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**
**Axis** வங்கி கணக்கு எண் : **105010100096779** - Tuticorin Branch (IFS Code : ICIC0006139)
**TMB** வங்கி கணக்கு எண் : **174100710400061** - Tiruchendur Road Branch - Tuticorin (IFS Code : TMBL0000106)

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

## நாட்டு நடப்புச் செய்திகள்

கடந்த செப்டம்பர் மாதம் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் பெய்த கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால், ஏராளமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடந்த 109 ஆண்டுகளில் ஜம்மு–காஷ்மீர் மாநிலம் இதுவரை சந்திக்காத வெள்ளப் பெருக்கை இந்த ஆண்டு சந்தித்துள்ளது. இந்த வெள்ளத்தில் சிக்கி நூற்றுக் கணக்கானோர் இறந்துள்ளதாகவும், லட்சக்கணக்கானோர் வீடுகளையும், உடமைகளையும் உறவினர்களையும் இழந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த வெள்ள மீட்புப் பணிகளில் இந்திய விமானப் படை மற்றும் ராணுவ விமானப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

---

அணுக் கழிவுகளை உண்ணக்கூடிய பாக்டீரியாக்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூமிக்கு அடியில் வசிக்கும் இந்த நுண்ணுயிரிகள் ஒற்றை உயிரணுவைக் கொண்டவை. இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் அணு உலைகளிலிருந்து வெளியாகும் பேராபத்தை கணிசமான அளவு குறைக்க முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

---

உலகில் 70 கோடிக்கும் அதிகமான பெண்கள் அவர்களின் 18 வயதிற்கு முன்னமே திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் யுனிசெஃப் அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் சுட்டி காட்டுகிறது. இந்தியாவில் சிறார் திருமணத்தை ஒளிக்க குறைந்தது 50 ஆண்டுகளாவது தேவைப்படும் என யுனிசெஃப் அமைப்பினர் தெரிவிக்கின்றனர். நன்றி : www.dinamani.com

---

இணையதளத்தின் மூலமாக வங்கிக் கணக்கிற்குள் நுழைய கடவுச் சொற்களுக்குப் பதிலாக, விரலில் ஓடும் ரத்த நாளங்களை வைத்து வாடிக்கையாளர்களை அடையாளப்படுத்துகின்ற இன்ஃப்ராரெட் ஸ்கேனர் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஏராளமான கடவுச் சொற்களை நினைவில் வைத்துக் கொள்ள கஷ்டப்படுகிறவர்களுக்கு ஒரு நல்ல செய்தியாகும்.

நன்றி : www.bbc.co.uk/tamil


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# ரமோலா S. பாபு (நாகர்கோவில்) அவர்களின் பணித்தள வருகை



கலாச்சார வரவேற்பு



பெண்கள் கூடுகையில் தேவனை ஆராதிக்கும் பெண்கள்



பெண்கள் கூடுகையில் தேவ செய்தி – சகோதரி. ரமோலா அவர்கள்



வேதாகமத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குதல்



வேதாகமங்களுக்காக ஜெபம்



பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்காக வழங்கப்படும் வேதாகமங்கள்



பிஜல்பூர் (இராஜஸ்தான்) விடுதி மாணவர்களுடன்



சிறுவர்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள்



குஜராத், பரோடி கிராம ஆலயத்திற்கு முன்பு

பணித்தள வருகை அறிக்கையினை 25,26 பக்கங்களில் பார்க்கலாம்

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **தினேஷ் P. பாரியா**

தந்தையின் பெயர் : பிரதாப்சிங் பாரியா

தாயாரின் பெயர் : நூரா பாரியா

பிறந்த நாள் : 12.05.2004

படிக்கும் வகுப்பு : 5 th Std.

சொந்த ஊர் : ஹரேந்திரகட்

மாவட்டம் & மாநிலம் : பான்ஸ்வாடா, இராஜஸ்தான்

**மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், சண்டை போடுவது, திருடுவது போன்றகெட்ட பழக்கமுடையவராய் இருந்தார். விக்கிரக ஆராதனை செய்பவராகவும் இருந்து வந்தார். குடி பழக்கத்தினிமித்தம் வீட்டில் வறுமை இருந்தது. அகமதாபாத்தில் கூலி வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில், இவனது தாயார் ஷாலோம் ஊழியர். பாவ்ஜி கராசியா அவர்கள் மூலமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். இதை அறிந்தவுடனே இயேசுவை வணங்கக்கூடாதென்று சண்டை போட்டார். ஆனால் ஊழியர் இவனுடைய தந்தைக்கும் இயேசுவை பற்றி சொன்னார். பின்பு விசுவாசித்து, மனந்திரும்பி கெட்ட பழக்கங்களிருந்து விடுவிக்கப்பட்டு, 1998–ல் இயேசுவை ஏற்றுக் கொண்டு, 2000–ம் வருடம் ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்து, ஹரேந்திரகட் சபையின் போதகராக ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** மூசா நன்றாக படிப்பான். கபடி விளையாடுவது பிடிக்கும். இவனுக்கு 1 சகோதரனும் 1 சகோதரியும் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** **Womens Society of Christian Service,** Singapore.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் **252 மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திடுங்கள்.